திறனாய்வரங்கம், சென்னை கிறித்துவக்கல்லூரி, 12-20-2010, 11:00 a.m.

நூல்: அந்த இருவரின் நாட்குறிப்புகள் ஆசிரியர்: அயென் ஏரியல் வில்சன்

**திறனாய்வாளர்:** பேராசிரியர். அபிதா

இலக்கியமானது ஒரு படைப்பைப் படித்தபிறகு வாழ்க்கைக்கு ஏதேனும் கற்றுக்கொள்ளும் வகையில் அமைந்திருக்கவேண்டும். “அந்த இருவரின் நாட்குறிப்புகள்” இதனை சிறப்பாக செய்கிறது. நல்ல குடும்பங்களே ஒரு நல்ல சமுதாயத்தை ஏற்படுத்தும் என்று எடுத்தியம்பி, அத்தகைய சமுதாயத்தை அடைய திருமணங்கள் உண்மையான அன்பால் அமையவேண்டும் என்று இந்நாவல் வலியுறுத்துகிறது.

பிறரின் நாட்குறிப்பு கிடைத்தால் அதில் என்ன இருக்கும் என்கிற ஆர்வம் யாருக்கும் இருக்கும். ஆனால் தலைப்பு கூறுவதுபோல இது இருவரின் நாட்குறிப்புகளின் தொகுப்பு அல்ல. மாறாக, மூன்று காதல் இணையர்களின் காதல் எவ்வாறு வெற்றியாகின்றது என்பதுதான் கதை. இது நடைமுறையில் நடக்காவிட்டாலும் சமுதாயம் இதிலிருந்து கற்றுக்கொள்ளவேண்டும்.

ஆசிரியர் முகவுரையில், “உப்பை எண்ணையில் கரைக்க முயலுதல்போன்ற வீணான கட்டாயத் திருமணங்கள் நடைபெறுவது வருந்தத்தக்கது.” என்று மையக்கருத்துக்கு ஏற்ப ஆழமாக தன் கருத்தை வலியுறுத்துகிறார்.

அழகு காதலிப்பதற்கு முதல் தகுதியாக வெளிப்படுத்தப்படுகின்றது. அது ஒருவகையில் உண்மையென்றாலும் நடைமுறையில் எல்லாரும் அப்படியல்ல.

நமது இலக்கியங்களில், ஒரு ஆணைக் குறித்து ஒரு பெண்ணின் இதயத்தில் எழும் மெல்லிய காதல் உணர்வுகள் குறைவாகவே வெளிப்படுத்தப்படுகின்றன. கதாப்பாத்திரங்களின் அத்தகைய அழகிய, மெல்லிய, காதல் உணர்வுகளை ஆசிரியர் அழகாக வெளிப்படுத்தியிருப்பது பாராட்டத்தக்கது.

கதைமாந்தர்கள் பொதுவாக மின்னனு சாதனங்களின்வாயிலாக ஆங்கிலத்தைப் பயன்படுத்தினாலும், தமது காதல் உணர்வுகளை வெளிப்படுத்த தாய்மொழிதான் சிறந்தது என்று எண்ணுவது மனதைத் தொடுவதாக இருக்கின்றது.

நூல் முழுவதும் குழும நிறுவனத்தில் பணிபுரியும் கதாப்பாத்திரங்கள் பெரும்பாலும் ஆங்கிலத்தில் பேசுவதுபோல் அமைந்துள்ளது. இது இக்காலத்தில் நடைமுறையில் உள்ள ஒன்றுதான். எனவே அதை அப்படித்தான் எழுதமுடியும். எனினும் ஆசிரியர் நேரம் எடுத்து அனைத்திற்கும் அருகிலேயே தமிழாக்கம் தந்திருப்பது பாராட்டத்தக்கது.

பெண் கதாப்பாத்திரங்கள், “க்யூட், அயக்ஷுவலி,” போன்ற வார்த்தைகளை அடிக்கடி பயன்படுத்துகிறார்கள். இது நடைமுறையில் நாகரிகமாக பெண்கள் கருதும் ஒன்றுதான்.

கதாப்பாத்திரங்கள் பெரும்பாலும் மேல்தட்டு வர்கத்தை சார்ந்தவர்கள். இவர்கள் கதை முழுதும் கோபப்படாமல் இருப்பது ஒன்றும் வியப்பல்ல, ஏனெனில் நடைமுறையில், மேல்தட்டு மக்களிடம் கோபப்படுவதற்கோ எரிச்சலடைவதற்கோ பெரும்பாலும் காரணங்கள் இல்லை. கதை முழுவதும், “டென்னிஸ் க்ளப், லேப் டாப், கொரோல்லா, பீச் ரிசார்ட், கெஸ்ட் ஹவுஸ்,” என்று மேல்தட்டு மக்களின் வாழ்க்கைமுறை ஆங்காங்கே சித்தரிக்கப்படுகின்றது.

மேலும் கதாப்பாத்திரங்கள் மேல்தட்டு மக்களாக இருப்பதால், திருமணம் என்று வரும்போது சாதி வேறுபாடுகளைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் சாதாரண சமுதாயத்தினரிடையே அத்தகைய கொடுமைகள் இருக்கின்றன. அத்தகைய சூழலில் உள்ள காதலர்கள் பல எதிர்ப்புகளைத் தாண்டி வெற்றிபெறுவது என்பது பெரிய விஷயமாக இருக்கின்றது. ஆசிரியர் அத்தகைய

நிலைகளையும் தமது வருங்கால படைப்புகளில் வெளிப்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

காதல் திருமணங்களை பெற்றோர் எதிர்ப்பதனால் வரும் துன்பங்களும் தெவையற்ற துர்மரணங்களும் கதையில் ஆங்காங்கே சித்தரிக்கப்படுகின்றது. இது நடைமுறையில் உள்ள ஒரு வேதனையான உண்மையாகும்.

குழும நிறுவனத்தில் பணிபுரியும் கதைமாந்தர் பெரும்பாலும் வெளி உலகத்தில் நடப்பது என்னவென்று அறியாமல் இருப்பதை இக்கதை எடுத்தியம்புகின்றது. இதுவும் நடைமுறையில் உள்ள ஒன்றுதான்.

ஷிவானி எண்ணும் கதாப்பாத்திரம் கம்பளிப் பூச்சிகளையும் கரப்பான் பூச்சிகளையும் பார்த்து பயப்படுவது பெண்களை சற்று வலுவற்றவர்களாக சித்தரிக்கின்றது. இது நடைமுறையில் அரிதான ஒன்றாகும். ஆசிரியர் தமது வருங்காலப் படைப்புகளில் பெண்களின் வலுவான பக்கங்களையும் காட்டவேண்டும் என்று நான் விளைகிறேன்.

டி.ஐ.ஜி. சுந்தர் என்கிற கதாப்பாத்திரம் மனைவிக்கு வெங்காயம் நறுக்கித் தருவதாக வரும் காட்சி பாராட்டத்தக்கது. எனினும், அது மட்டும் ஷிவல்ரசாக ஒருவரைக் காட்ட போதாது. ஒரு நல்ல கணவராக இருக்க இன்னும் நிறைய விஷயங்கள் இருக்கின்றன.

தந்தை தனது மகளைப் பற்றி கூறுகையில், “நீங்கதான் அத குழந்தைனு சொல்றீங்க. அதப் பெத்துவெச்சுக்கிட்டு நான் படுற பாடு! சனியன் அழகாவேற இருக்கு.” என்று அழகை ஆபத்தாக எண்ணுவது, சமுதாயத்தில் எந்த அளவுக்கு பெண்களுக்கு பாதுகாப்பின்மை நிலவுகிறது என்பதை வெளிப்படுத்துகின்றது.

மொத்தத்தில், “அந்த இருவரின் நாட்குறிப்புகள்” எனும் இப்புதினம், அமைதியான, நல்ல ஒரு சமுதாயத்தை உருவாக்க அனைவரும் கடைபிடிக்க வேண்டிய விஷயங்களைக் கூறும் ஒரு அழகிய கலைப் படைப்பாகும்.

நிகழ்ச்சியில் உரையாற்றும் அயென்:

